யோனா



Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

+94763223960

1-9-2024

யோனா

ஆழ்ந்த உறக்கத்தில் புரண்டு படுத்த யோனா
அதிசயமான ஒளி கண்டு மெல்ல விழித்தார்
அஞ்சி மனம் நடுங்கத், தாள்பணிந்து, நெடுஞ்சாண்
கிடையாய் தொழுது வணங்கிட, ஆண்டவர் உரைத்தார்





நினிவே மக்களின் அக்கிரமம் என்னைக்
கோபம் கொள்ளச் செய்கிறது, அதை அழிக்கமுன்
அதற்கொரு சந்தர்ப்பம் அளிக்க விரும்புகிறேன்
நினிவே மனந்திரும்பி வாழ சென்று உபதேசி

வார்த்தை கேட்டு விழித்தவர்-வாக்கு
கனவா? நனவா? என்றஞ்சினார்,
ஆண்டவர் சொற்கேளாமல் தர்சீசு நகரக்கு
கப்பல் ஏறித் தப்பி ஓட முயன்றார்

எண்ணூறு மைல் பயணம் எண்ணிட
அஞ்சிய மனம், இஸ்ராயேலர் நமக்கோ நினிவே
எதிரி, நம்மை அடிமை கொண்ட இனம்,
இறைவாக்கு நிறைவேற, அழிவதே நலம்





அலை அலையாய் கருமேகங்கள் கூடி வர,
வான் கருக்க, மின்னலோடு பேரிடி,
கொடும் பறை என முழங்கிட, வான் நடுங்கிட,
ஆழ்கடலில் அல்லாடிய மரக் கலம்

மூழ்கடிப்பதா? மோதிச் சிதறடிப்பதா? என
உயர எழுந்த பேரலைகளின் ருத்திர தாண்டவம்
கலத்தை உருட்டிப் புரட்டுவதா? உருத்தெரியாமல்
உடைத்தெறிவதா? புயலின் ஊழித்தாண்டவம்



அஞ்சிய கப்பல் தலைவன் தன்னாலான முயற்சிகள்
அனைத்தும் செய்தும் கப்பலைக் காப்பாற்ற முடியாது,
பொதிகளை கடலில் வீசக் கட்டளையிட்டு, பயணிகளை தத்தம்
கடவுளரை வேண்டப் பணித்தவன், சுற்றிப் பார்வையிட்டான்

மனிதனால் முடியாதது கடவுளால் முடியும்
நம்பிய கப்பல் தலைவன், கப்பலின் அடித் தட்டடில்
சுகமாய்த் தூங்கும்-யோனாவைத் தட்டி எழுப்பி
நீயும் உன் தெய்வத்தை மன்றாடு பணித்தான்

கப்பலில் இருந்தவர்களோ நமக்கு நேரிடும்
இத்தீங்கிற்கு காரணம் யாதோ? சீட்டுக் குலுக்கிப்
போட்டுப் பார்க்க, சீட்டு யோனா பெயரைக்
குறிக்கத், தன் கதை உரைத்த யோனா



எபிரேயன் நான், இறை கட்டளையை மீறியது
என் குற்றம், இத் துன்பத்திற்கு நானே காரணம்
என்னைக் கடலில் போட்டால் துயரம் நீங்கும்



கடவுளின் கட்டளையை மீறித் தப்பிக்க எண்ணினேன்
முடியவில்லை, இறை கோபம் நம்மை வாட்டுகிறது
என்னைக் கடலில் தூக்கி வீசுங்கள், இறை கோபம் நீங்கும்
புயலும், மழையும், பேரலையும் அடங்கும்

உன்னைக் கடலில் வீசிக் கடவுளின் கோபத்திற்கு ஆளாவதா?
அஞ்சியவர்கள் தண்டு வலித்தும் ஆவது ஏதுமில்லை
எனக் கண்டு, எம்மைக் காத்தருள்க என இறைவனைக்
கெஞ்சி மன்றாடி, யோனாவை கடலில் தூக்கிப் போட்டார்



கார்மேகங்கள் கண் மறைய, போர்ப் பறை என முழங்கிய
பேரிடியும், மின்னலும் மாயமாய் ஒழிய, பேரலையும் ஒடுங்கி அடங்க,
அமைதியான கடல், வாழும் இறைவனைத் துதித்து தெண்டனிட்டு
வணங்கிப் பணிந்த மனங்களுக்கு கிட்டிய இறையருள்



பெருமீன் ஒன்று யோனாவை விழுங்கிட
மூன்று நாள் மீன் வயிற்றில் யோனாவின் வாசம்
நெஞ்சிலே இறை துதி பாடிய நேசம்

கரையிலே யோனாவைத் துப்பிய பெருமீன்
கரையேறிய யோனா நெஞ்சிலே-என் இறைவனோ
வாழும் இறைவன், அவரே என் தஞ்சம்
உமக்கு நிகராய் யாரோ? மனதிலோ பேரச்சம்



கடவுளிடமிருந்து தப்பியோட முனைந்த மனிதர்-எங்கும்
நிறைந்தவர், எல்லாம் அறிபவர், வல்லவரிடமிருந்து
எங்கே தப்பி ஓடுவது?, புரிந்தவர் சரணடைந்தார்
இதோ உம் அடிமை என்றே தம்மைக் கையளித்தார்



உள்ளம் குளிர, உரோமம் சிலிர்த்துறைய
வெள்ளமென ஆனந்தக் கண்ணீர் பெருக,
இருகரம் கூப்பி தலைமேல் வைத்து
தெண்டனிட்டு வாழும் தேவனைத் துதித்த மனம்

கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய
கைமலர் தலைமேல் குவிய, என்னே!நின் கருணை
எம்பெருமானே, கடலில் எறிந்தவனை
கரைசேர்த்து ஆட்கொண்ட கருணாகரனே






உம்மை விட்டுப் பிரிந்து வெகு தொலைவில் ஓடி ஒளிய
நினைத்தும், என்னை கைவிடாத நின் கருணைதான் என்னே?
கடலும் மூழ்கடிக்காது, பெருமீனும் உண்ணாது
காத்து, கரைசேர்த்த வல்லமைதான் என்னே!

நன்றி சொல்ல வார்த்தை போதாது-நாதனே
நின் தாள் பணிந்து நித்தம் தொழுதாலும்-
நான் பட்ட கடன் தீராது, பரமனே என்னைத்
தடுத்தாட்கொண்ட ஈசனே என்றும் நின் அடிமை நான்

உம் பணி செய்வதே இனி என் கடன்
நின் திருப்பாதம் தொழுவதே நெஞ்சிற்கு நிம்மதி,
ஊதாரி மகனாய் உன்னை பிரிந்தேன்- நல்லாயனாய்
தேடி செம்மறி என்னை அரவணைத்த தெய்வம் நீ





மூன்று இரவும், பகலும் போனது தெரியாமல்
பசியும், தாகமும் வருத்தாமல், ஆழ்ந்த
தவத்தில் இலயித்த மனம், ஆண்டவர்
என் ஆயர் எனப் புகழ்ந்த குழந்தை மனம்

இறை கட்டளையை மீறி எதிர்த்திசையில்
தப்பிச் செல்ல முயன்ற கோழை,
இறை அடிமை நான் என்று பூரித்தது-உம் சித்தம்
நிறைவேறுக என்று தாள் பணிந்த வேளை



உள்ளினேன் உன்னதப் பெருநிதி நீர் என்று , உவகையால்
துள்ளினேன், என்னைக் காக்கும் தெய்வம் நீரென்று,
அள்ளிப் பருகினேன் உம் வாக்கை வாழ்வின் வழியென்று-ஆனந்தப்
பள்ளுப் பாடுகிறேன் தெய்வமே நின் அடிமை நான் என்று

நீனிவே மா நகர்

காமப் பெருக்கோ ஒரு கோடி-எளியோரின்
வாதைப் பெருக்கோ ஒரு கோடி-ஏழையரின்
கண்ணீர்ப் பெருக்கோ பெருங்கோடி-மெய்யான
வேதப்பெருக்கும், இறை நாதப்பெருக்கும் ஏதடி?

கறைபட்டுள்ளது மறையோர் சீலம்
குறைபட்டுள்ளது மன்னன் செங்கோல்
குழைபட்டுள்ளது மங்கையர் ஒழுக்கம்
அராஜகமோ வலியோர் வேதம்





நீதி சாரமிழக்க, வல்லோர், தீயோர்
ஏழை, எளியவர் வாழ்வைச் சீரழிக்க
ஏழைகளின் வாழ்வோ நாளும் எரிநரகம்
வலியோர் வாழ்வோ எந்நாளும் சொர்க்கம்

அறம் மறந்த நெஞ்சம், பொருளும், இன்பமும்
தேடியலைய, நாட்டைச் சூழ்ந்த அறியாமை இருள்
வெங்கதிர்க்கும், செந்தீ விரி சுடர்க்கும் நீங்காது
பொங்கு மதியொளிக்கும் போகாத மருள்




மென்துகில் மேனியழகை காட்ட, மெல்லிடை
குலுக்கி, கன்னியர் நடனமாட, மதுவோடு
மாதை நாடிய குடும்பத் தலைவன், இல்லறமோ
அறம் பிறழ, வறுமையால் சோரம்போன பெண்மை

மையளாவிய பூவிழிகளும், தையலாள் மதிமுகமும்
நெய் தடவிய மதுமலர்குழலும், நிலவோ? இவள்
மலரோ? இல்லை நித்திலமோ? எனச் சொல்ல
கவர்ந்திழுக்கும் காரிகையரோ தெருவில்



கொவ்வை இதழ் சிவப்பும்,
வாய்க்கண் வெளுப்பும் இடம்மாறப்
நாளும் காணும் மங்கையர் சுகம் பேரின்பம்
விட்டில் பூச்சிகளாய் ஆண்கள்



இடையோ மின்னல் நடையோ நாட்டியம்
இசைபாடும் குயிலோ, நடனமாடும் தோகையோ
நங்கை என , காமன் மலர்க் கணைபட்டு
கணைபட்ட கலைமானாய் விழும் காளையர்

இடைதொட்டு நடையோடு நாட்டியமாடும் மதுமலர்க் கூந்தலும்,
படையென வேல்விழியும், விற்புருவமும், முத்துப் புன்னகையும்
பிறை நுதல் பூத்த திலகமும், இளமுலைப் போகமும்
வார்த்தைக்குள் அடங்காத அழகு, வாழ்வோ தேன் நிலவு

அறம் மறந்து, பொருளும், இன்பமும்
தேடி வாழ்வைத் தொலைத்த மூடர்

நங்கை இதழ் சுவை நறுந்தேறல் என
அழகு நங்கையரைச் சுவைத்து, வெறி கொண்ட
போதையில், நெறி தவறும் மனித வாழ்வு
நீதிக்கே சவாலாக ஏழையரின் சாவு



பொன் கொடுத்துச் சுவைக்கும், பெண் இன்பமோ
போதை, பொன், பொருள் திருட, உயிர் பறிக்கும்
கொலை , கொள்ளையோ ஆடவருக்கு வாழ்வான கீதை



மதுவோடு மாதர் சுகம் சம்போகம்
சப்பிரமஞ்சத்தில் சம்போகம் பேரின்பம்
இறையச்சம் மறந்த இனம், வலியோர்
எளியோரை வருத்தி வாழும் மிருககுணம்

கன்னியர், அன்னையர் வாழ்வோ பரிதாபம், பகையச்சம் ஒழித்த
வல்லமையோ அரியணையில் வாழ, ஆணவத்தில் இறையச்சம் மறந்து
மது, மங்கையர் போகத்தில் கொண்டாட்டமான வாழ்வு,
கொலை, களவு பாலியல் வல்லுறவால் நாளும் அநீதச் சாவு

சூதோடு வாதும் சுகபோகம், நலிந்தோர், செல்வர்
பொருள் பறித்தல், போலித் தெய்வங்களுக்குப் பூஜை
வழிபாடு, சடங்காக, நீதி, நேர்மை, அன்பு, இரக்கம்
அறியாத நீதி, ஆணவமும், அராஜகமும் ஆளும் நியதி

நீங்கக் காண்பது உண்மையும், நேர்மையும்
தூங்கக் காண்பது சட்டமும், நீதியும்
நெருங்கக் காண்பது வன்முறைக் கலாச்சாரம்
ஏங்கியும் காணாதது அன்பும், இரக்கமும்






கடவுள் கட்டளைப்படி நினிவே மாநகர் எங்கும்
யோனாவின் குரல் ஒலித்தது, கடின உள்ளத்தோரே
தீய வழிகளை விட்டு விட்டு நல்வழியைத் தேடுங்கள்
மனம் திரும்பி புது வாழ்வு வாழுங்கள்

இல்லையேல் நாற்பது நாளில்
நினிவே அழிவது உறுதி,-இறை தூதன் நான்
இது வாழும் கடவுளின் செய்தி

இறைவாக்கு மன்னன் செவி சேர,
அஞ்சிய மனம் வருந்தியது அடிமை முதல்
உயர் குடிவரை, கால்நடைகளும், வளர்ப்பு
பிராணிகளும், ஒழுகிட ஆணை பிறந்தது

சாக்குடுத்தி, நோன்பிருந்து, இறைவனை மன்றாடி
மனந்திருந்தி மன்னிப்பை இரஞ்சிட ஆணையிட்டது,
இறைவாக்கிற்கு செவி சாய்த்த மன்னன் மனம் தானும்
சாக்குடுத்தி சாம்பலில் அமர்ந்து நோன்பிருந்தது



யோனாவின் வாக்கோ பேரிடியாய் அச்சுறுத்த
எரிதணலாய் மனதை தீய்க்க, மனச்சாட்சி
வாழும் தீயவாழ்வைப் பழித்துரைக்க-இறை சாபத்திற்கு
அஞ்சிய மன்னன் இட்ட கட்டளையோ மேல்வரிச் சட்டமானது



உண்டு, குடித்து, உறவு கொண்டாடி
கலவியின்பம் கண்ட மாக்கள், கடவுளின் செய்தி
இடியாய் ஒலிக்க, மன்னன் முதல் வளர்ப்பு மிருகம் வரை
சாக்கு உடுத்தி, சாம்பல் பூசி நோன்பிருந்த மக்கள்



ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்
மறைந்திட, குடியும், கூத்தும், கேலிக்கையும்
ஓய்ந்திட, மது, மாது, சூது, வாது. கொலை
ஒழிந்து, நோன்பிருந்த நினிவே



வாழும் இறைவனை அறியாத ஈனம், அன்பிறைவனோ
இருமை கடந்த கருணாகரன், சாக்குடுத்து, நோன்பிருந்து,
சாம்பலில் அமர்ந்து இறைவனைக் கூவியழைத்த இனம்,
பிழை பொறுத்து தயை புரிய இறை இரக்கத்தை கெஞ்சிய மனம்

மக்களின் அழுகுரல் மாதவன் சன்னிதி சேர,
தம் மனதை மாற்றி, இரங்கி, இன்புற்ற
அன்புத் தந்தை, அன்பே தெய்வமாய
தன்னைக் காட்டிய மெய் இறைவன்



இறையச்சமோ ஞானத்தின் எழுச்சி-இறைவாக்கு
மனங்களைப் புடம் போட, தீ சுட்ட பொன்னாய்
மக்கள் மனம் மாற, நறுமணத் தூபமாய் அவர்தம்
வேண்டுதல் இறைவனைச் சேர, இரங்கிய இறைமனம்

நல்லோர் மேலும், தீயோர் மேலும்
நாளும் கதிரவனை உதிக்கப் பண்ணும் இறைவன்
இனம், மதம், மொழி கடந்து-அன்பு,
உண்மை, இரக்கம், மன்னிப்பாய் அதன் வடிவம்

நாற்பதாவது நாள் நெருங்கிட ஊர் எல்லையில்
நடப்பதை பார்த்திருக்க காத்திருந்த யோனா

தண்டணையில்லை, நினிவே அழிக்கப்படுவதில்லை
யோனாவிற்கு ஏற்காத வாதம், ஆண்டவரே நீர், கனிவும்
இரக்கமும், அளவில்லாப் பொறுமையும், அன்பும் நிறைந்தவர்
அறிந்தே உம்மிடம் இருந்து தப்பிக்க ஓடினேன்



நீர் மனதை மாற்றிக் கொள்ளும் இறைவன்
அழிக்க நினைப்பீர், பின் இரக்கம் கொள்வீர்
பொய்யனாய் வாழ்வதை விட நான் சாவதே மேல்
என் உயிரை எடுத்துக்கொள்ளும்



நகரை விட்டு வெளியேறி, கிழக்கே ஒரு பந்தலை
அமைத்து, நகருக்கு நிகழவிருப்பதை பார்க்க,
அங்கே அமர்திருந்த இறைவாக்கினர், அருகே முளைத்த
ஆமணக்குச் செடி நிழல் தர அனந்தம் கொண்ட மனிதர்

விடியலில் புழு அரித்து செடி மடிய,
அனல் காற்று வீசிட, களைப்போடு மயக்கம் வர
வாழ்வதை விடச் சாவதே மேல், மரணமே வா
விரக்தியில் அழைத்த பிடிவாதக்காரர் யோனா





நட்டு வளர்க்காத செடிக்காய் நீ வருந்துவது
முறையா? ஓர் இரவில் முளைத்து, மறு இரவில்
மடிந்த செடிக்காய் மனம் வருந்துகின்றாய்-நினிவே
நகரோ பல இலட்சம் மக்கள் வாழும் பெருநகர்

வலது, இடது கை ஏதென்று அறியாத சிறார்களும்
பால்குடி மறவாத குழந்தைகளும், தாய்களும்
எண்ணிறந்த கால்நடைகளும் உள்ள இடத்திற்கு
நான் இரக்கம் காட்டியது தவறா?-வெட்கிய யோனா

அன்பே நீ, அளவில்லாக் கருணாகரன் நீ
இரக்கம் நீ, காப்பவன் நீ அழிப்பதில்லை
வாழ்வளிக்கும் தெய்வம் நீ, வாழ்த்தி துதித்த மனம்
அன்பிறைவன் நீர் அஞ்ஞானி நான்





உண்மை, அன்பு, கருணை இரக்கம், நீதி, சமாதானம்
நீர் வேண்டுவது, வாழும் எல்லா உயிர்களிடத்தும்
உம்மைக் காண, உம் அன்பே எம்மைத் தூண்டுவது
உம்மை அறிந்து இன்புறுவதே மோட்சம்
மனந்திரும்பியவருக்கு உம் இரக்கம்
தேனடையிலும் இன்பம், உம் பொறுமையோ
ஏழ்கடலிலும் ஆழம், விசும்பிலும் நீளம்

என் அறியாமையைப் பொறுத்தருள்க,
பொங்கு மாங்கடலும், விசும்பிற்கும் அடங்காத
உம் பேரன்பு, அன்பே உம் திருவடிவு

உணராத நின் நிலையை நீ உணர்த்த, புணராத தாள்
தலையில் புணர்ந்ததென மனம் புளங்காகிதமடைய,
நின்னடி சரணம் எனப் பணிந்தேன் , ஆட்கொள்வாய்
அம்மானே என்னை ஆளும் பெருமானே

நின் சொல் கேளாப் பிழையும், நின்னை விட்டு ஓடிய பிழையும்,
நின் கருணை அறியாப் பிழையும், இரங்காப் பிழையும், நெஞ்சம்
கசிந்துருகி உம்மைத் தொழாப் பிழையும், மக்கள் துயர் கருதாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் எம் பெருமானே ஈசனே



உள்ளம் அன்பால் பொங்கிட, உரோமம் சிலிர்த்துறைய
நெஞ்சம் உருகி விழி நீர் பெருகிட, இறை நேசத்தால்
நெகிழ்ந்த நெஞ்சம், எங்கும் நிறைந்த, அன்பே வாடிவான
இறைவனை துதித்தது, சிரம் மண்ணில் பதியப் போற்றியது



நாற்பது நாட்கள் கடந்திட, நினிவே நகருக்கு யோனாவின்
விஜயம், ஊரே கொண்டாடி வரவேற்று, இறைவாக்கினர்
நீர் எனப்போற்றிட, எல்லாப் புகழும் இறைவனுக்கே
எனத் தம்மைத் தாழ்த்தி, இறைவனைப் போற்றிய மனிதர்

வாழும் இறைவனுக்கே
எந்நாளும் துதியும், தோத்திரமும் எனத்
தொடங்கிய கொண்டாட்டம்
வாழ்வோ நல் அறமான இன்பம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-01-09-2024



The story of Jonah in the Bible offers valuable life lessons that resonate with our daily walk with God. Here are some key takeaways:

1. **God's Mercy and Grace**: Jonah teaches us that God's mercy is wider and His grace is greater than all our sins[1]. Despite Jonah's rebellion, God pursued him and extended grace even to the people of Nineveh, who were Israel's enemies.

2. **Obedience and Listening**: Jonah's initial refusal to obey God's command highlights the importance of listening to God's voice and seeking His direction[4]. God speaks to us, but we must make ourselves available to receive His guidance.

3. **God's Love for All**: The story emphasizes that God's love extends to everyone, even those we might least expect[7]. He desires all people to turn to Him, regardless of their background or past actions.

4. **God's Patience**: Despite Jonah's rebellion, God patiently pursued him and used various means to guide him back on track[5]. We can't run away from God; His patience and love are always available.

5. **Stepping Out of Comfort Zones**: Jonah's journey to Nineveh, an 800-mile trip, challenges us to step out of our comfort zones for God's purposes[1]. Sometimes, God calls us to unexpected places or tasks.

6. **God's Unstoppable Plan**: Even when we rebel or make mistakes, God's plan for our lives remains intact. Jonah's disobedience didn't derail God's purpose for him[6].

Remember, the book of Jonah isn't just about a big fish—it's about God's relentless pursuit, our response to His call, and the transformative power of obedience and grace. 🌟 📖